ஸூ லை இஸ்லாமிய அழைப்பு நிலையம்
தொலைபேசி : 2410615 – 2414488 ஃபெக்ஸ் 232



நோன்பின் சுருக்கமான 70 சட்டங்கள்



தொகுப்பு
சனசமூகப் பிரிவு,ஸூ லை இஸ்லாமிய அழைப்பு நிலையம்

மூலம்
ஆஷ்ஷேக் : முஹம்மத் அல் முனஜ்ஜித்

www.islamnewlife.com

كتب الجاليات

١٥٥
١١

مكتب الدعوة بالسلي

هاتف ٠١٢٤١٠٦١٥ تحويلة ٥٥٥ - ٠١٢٤١٤٤٨٨ ناسوخ ٢٣٢



مختصر ٧٠ مسألة في الصيام



تأليف
الشيخ /محمد صالح المنجد

ترجمة
قسم الجاليات بالمكتب

0501012

تاميلي

எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே,நாம் அவனைப் புகழுகின்றோம், அவனிடமே உதவியும் தேடுகின்றோம், மேலும் அவனிடமே பாவ மன்னிப்பும் தேடுகின்றோம். மேலும் எமது ஆத்மாக்களின் கெடுதிகளை விட்டும், எமது செயல்களின் தீமைகளை விட்டும் அல்லாஹ்விடம் பாதுகாவல் தேடுகின்றோம். எவருக்கு அல்லாஹ் நேர்வழி காட்டுகின்றானோ அவரை யாராலும் வழிகெடுக்க முடியாது. மேலும் யாரை அல்லாஹ் வழிகெடுக்கின்றானோ அவனுக்கு யாராலும் நேர்வழி காட்டவும் முடியாது. அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குத் தகுதியான இறைவன் யாரும் இல்லை அவன் தனித்தவன், இணைதுணை அற்றவன் என நான் சாட்சி கூறுகின்றேன். மேலும், முஹம்மத் ﷺ அவர்கள் அவனின் அடியாரும், திருத்தூதரும் ஆவார்கள் எனவும் சாட்சி கூறுகின்றேன்.

அல்லாஹ் தனது அடியார்களுக்கு நல்லமல்களுக்கென பருவகாலங்களை தனது அருளால் வழங்கியுள்ளான். அக்காலங்களில் நன்மைகளின் கூலி பன்மடங்காக வழங்கப்படும், தீமைகள் மன்னிக்கப் பட்டு, அந்தஸ்துகள் உயர்த்தப்படும். இவ்வாறான மிகவும் மகத்துவமிக்க பருவகாலங்களில் ஒன்றுதான் ரமழான் மாதம். இம்மாதத்தில் நோன்பு நோற்பதை அல்லாஹ் தனது அடியார்களுக்குக் கடமையாக்கியுள்ளான். மேலும் இதில் நன்மைகளைச் செய்யுமாறு ஆர்வமூட்டி, இம்மாதத்தில் நோன்பு நோற்பதை கடமையாக்கியதற்கு நன்றி செலுத்தும் படி வழிகாட்டியுள்ளான்.

நோன்பு என்ற இவ் வணக்கம் மிக உயர்ந்த ஒரு வணக்கமாக இருப்பதினால் நோன்பு மாதத்துடன்

தொடர்புடைய சட்டங்களைக் கற்றுத் தெரிந்து கொள்வது கடமையாகும். இந்நூல் நோன்பின் சட்டங்கள், ஒழுக்கங்கள் மற்றும் ஸு ன்னத்கள் ஆகியவற்றின் சுருக்கமான சில சட்டங்களை உங்களுக்கு முன்வைக்கிறது.

நோன்பு என்றால் என்ன ?

1. நோன்பு என்பதற்கு அரபு மொழியில் " صَوْم - ஸவ்ம்" எனக் கூறப்படும். அரபு மொழியில் " صَوْم - ஸவ்ம்" என்ற வார்த்தையின் பொருள் தடுத்துக் கொள்ளல் என்பதாகும். இஸ்லாத்தின் கண்ணோட்டத்தில் " صَـــوْم " (நோன்பு) என்பது :

(இரண்டாவது வைகறை உதயமானது முதல் சூரியன் மறையும் வரை நிய்யத் (நோன்பு நோற்கும் எண்ணத்)துடன் நோன்பை முறிக்கும் காரியங்களை விட்டும் தடுத்துக் கொள்ளல்). என்பதாகும்.

நோன்பின் சட்டம்

2. ரமழான் மாதத்தில் நோன்பு நோற்பது கட்டாயக் கடமையாகும், மார்க்கம் அனுமதித்த தக்க காரணமின்றி எவரேனும் ரமழான் மாதத்தின் ஒரு நோன்பையேனும் நோற்காது விட்டுவிட்டால் அவர் மிகப் பெரும் பாவமான

காரியமொன்றைச் செய்துவிட்டார் என்பது இஸ்லாமிய அறிஞர்களின் ஏகோபித்த முடிவாகும்.

நோன்பின் சிறப்பு

3. நோன்பின் பல்வேறுபட்ட சிறப்புகள் பற்றி பல ஹதீஸ்கள் வந்துள்ளன. அச்சிறப்புகளில் சிலதை மாத்திரம் கீழே காணலாம்.

- அல்லாஹ் நோன்பைத் தனக்கென்றே பிரத்தியேகமானதாக ஆக்கியுள்ளான். அதன் கூலியை அவனே வழங்குகின்றான், மேலும் நோன்பாளிக்குறிய கூலியைக் கணக்கின்றி பல மடங்குகளாகப் பெருக்கிக் கொடுக்கின்றான்.

- நோன்பாளியின் பிரார்த்தனை நிராகரிக்கப்படமாட்டாது

- நோன்பாளிக்கு இரு மகிழ்ச்சிகள் உள்ளன. (நோன்பு திறக்கும் போதும், அல்லாஹ்வை சந்திக்கும் போதும்).

- நோன்பு அதை நோற்ற அடியானுக்காக மறுமை நாளில் பரிந்து பேசும்.
- நோன்பாளியின் வாயிலிருந்து வெளியாகும் வாடை அல்லாஹ்விடம் கஸ்தூரி வாடையை விடவும் நறுமணமிக்கதாகும்.

- நோன்பு ஒரு கேடயம் மற்றும் நரகத்தை விட்டும் பாதுகாக்கும் பாதுகாப்பான ஒரு கோட்டை.

- எவர் அல்லாஹ்வின் பாதையில் ஒரு நாள் நோன்பு நோற்கிறாரோ அவரின் முகத்தை எழுபது வருடங்களுக்கு அல்லாஹ் நரகத்தை விட்டும் தூரமாக்குவான்.

- சுவனத்தில் ரையான் என்ற ஒரு வாயில் இருக்கின்றது. அதன் வழியால் நோன்பாளிகள் மாத்திரமே நுழைவார்கள். அவர்களைத் தவிர வேறெவரும் அதன் வழியால் நுழைய மாட்டார்கள்.

❀ ரமழான் மாதத்தில் நோன்பு நோற்பது இஸ்லாத்தின் அடிப்படைக் கடமைகளில் ஒன்றாகும். ரமழான் மாதத்திலேயே அல்குர்ஆன் இறக்கப்பட்டது, இம்மாதத்தில் ஆயிரம் மாதங்களை விடச் சிறந்த ஓர் இரவு இருக்கிறது, ரமழான் மாதம் வந்துவிட்டால் சுவனத்தின் வாயில்கள் திறக்கப்பட்டு, நரகத்தின் வாயில்கள் மூடப்படும், மேலும் ஷைதான்கள் விலங்கிடப்படுவார்கள். ரமழான் மாதத்தில் நோன்பு நோற்பது பத்து மாதங்கள் நோன்பு நோற்பதற்குச் சமமாகும்.

நோன்பின் சில பயன்கள்

4. நோன்பில் பல நுட்பங்களும், பயன்களும் உள்ளன. அவை அனைத்தும் தக்வா என்னும் இறைபக்தியை அடிப்படையாகக் கொண்டே உள்ளன.

அவற்றில் சிலதைக் கீழே காணலாம்.

- ஷைதானை அடக்குகின்றது.
- மனோஇச்சையை உடைக்கின்றது.
- உடலுறுப்புக்களைப் பாவங்களை விட்டும் பாதுகாக்கின்றது.
- மனோஇச்சையைத் தவிர்ந்து கொள்வதற்கும், பாவங்களை விட்டும் விலகிக் கொள்வதற்கும் மனதில் உறுதியான எண்ணத்தை வளர்க்கின்றது.
- ஒரு முஸ்லிம் தனது வாழ்வில் ஒழுங்கு முறையைப் பேணவும், தனது எல்லா விடயங்களையும் நுணுக்கமான நேரஅட்டவணையின் அடிப்படையில் அமைத்துக் கொள்ளவும் நோன்பு அவனுக்குப் பயிற்சி அளிக்கின்றது.
- முஸ்லிம்களின் ஒற்றுமை என்னும் அடிப்படைக் கொள்கையைப் பிரகடனப் படுத்துகிறது.

<u>நோன்பின் ஒழுக்கங்களும், ஸு ன்னாக்களும்</u>

5. நோன்பின் ஒழுக்கங்களில் சிலவை கட்டாயக் கடமைகள், மற்றும் சிலவை ஸு ன்னாக்கள் என இருவகைப்படுகின்றன. அவற்றில சிலவற்றைப் பின்வருமாறு காணலாம்.

- ஸஹர் செய்வதிலும், அதனை பிற்படுத்தி ஃபஜ்ருடைய நேரத்திற்கு அண்மித்த நேரத்தில் செய்வதிலும் பெரும் ஆர்வம் செலுத்துதல்.

- நோன்பு திறக்கும் நேரமானதும் விரைவாக நோன்பைத் திறத்தல்.

நபி ﷺ அவர்கள் கூறினார்கள் :

(لاَ يَزَالُ النَّاسُ بِخَيْرٍ مَا عَجَّلُوا الْفِطْرَ) متفق عليه

மனிதர்கள் விரைவாக நோன்பு திறக்கும் காலமெல்லாம் நலமாகவே இருப்பார்கள்.

ஆதாரம் : புகாரி, முஸ்லிம்.

மேலும், நபி ﷺ அவர்கள் தொழுகைக்கு முன் சில கனிந்த பேரீத்தம் பழங்களைக் கொண்டு நோன்பு திறப்பவர்களாக இருந்தார்கள். கனிந்த பேரீத்தம் பழங்கள் இல்லாவிட்டால் சாதாரண சில பேரீத்தம் பழங்களைக் கொண்டு நோன்பு திறப்பார்கள். சாதாரண பேரீத்தம் பழங்கள் இல்லாவிட்டால் சில மிடக்கு தண்ணீரைக் குடித்து நோன்பைத் திறப்பவராக இருந்தார்கள்.

ஆதாரம் : அஹ்மத், அபூ தாவூத், திர்மிதி.

நோன்பு திறந்த பின் கீழ்க் காணும் துஆவை ஓத வேண்டும்.

ذَهَبَ الظَّمَأُ ، وَابْتَلَّتِ الْعُرُوقُ ، وَثَبَتَ الأَجْرُ إِنْ شَاءَ اللهُ

தஹபள்ளமஉ , வப்தல்லதில் உருகு , வஸபதல் அஜ்ரு இன்ஷா அல்லாஹ்.

பொருள் :

தாகம் தீரந்துவிட்டது,நரம்புகள் நனைந்துவிட்டன, இன்ஷா அல்லாஹ் கூலியும் கிடைத்துவிட்டது.

ஆதாரம் : அபூ தாவூத்.

- பாவங்களை விட்டும் தூரமாக இருத்தல்.
- நன்மைகளை வீணாக்கி,பாவங்களை ஏற்படுத்தும் விடயங்களில் சிலதாவன :

    1. பயனற்ற நொடிகளுக்குத் தீர்வுதேடுவதில் ஈடுபடல்.
    2. தொடர்கதைகள்,சினிமாப் படங்கள் மற்றும் விளையாட்டுப் போட்டிகளைப் பார்த்தல்.
    3. பயனற்ற கூட்டங்களில் கலந்து கொள்ளல்.
    4. வீணாகப் பாதைகளில் சுற்றித்திரிதல்.

- அதிகமாக உண்ணுவதைத் தவிர்ந்து கொள்ளல்.

நபி ﷺ அவர்கள் கூறினார்கள் :

مَا مَلأَ ابْنُ آدَمَ وِعَاءً شَرًّا مِنْ بَطْنٍ

ஆதமுடைய மகன் வயிற்றை விடவும் தீய எந்தப் பாத்திரத்தையும் நிரப்பவில்லை.

ஆதாரம் : அஹ்மத், திர்மிதி.

- அறிவு, செல்வம், அந்தஸ்து, உடல், நற்குணம் ஆகியவற்றை நல்வழியில் அற்பனம் செய்தல்.

ரஸூலுல்லாஹி ﷺ அவர்கள் மனிதர்களில் பெரும் கொடைவள்ளலாக இருந்தார்கள், அதிலும் ரமழானுடைய காலத்தில் இன்னுமதிகம் கொடை கொடுப்பவராக இருந்தார்கள்.

புனித ரமழான் மாதத்தில் செய்ய வேண்டிய சில விடயங்கள்

- வணக்கம் புரிவதற்காக சூழலையும், உள்ளத்தையும் தயார்படுத்திக் கொள்ளல்.
- அல்லாஹ்விடம் பாவமன்னிப்புக் கோரி, மீள்வதைத் தீவிரப்படுத்தல்.
- ரமழான் மாதம் வருவதையிட்டு மகிழ்ச்சியடைதல்.
- முறைப்படி நோன்பு நோற்றல்.
- தராவீஹ் தொழுகையை உள்ளச்சத்தோடு நிறைவேற்றுதல்.
- நடுப்பத்தானதும் சோர்வின்றி உற்சாகமாக வணக்கங்களில் ஈடுபடுதல்.

- லைலதுல் கத்ரை அடைய முயற்சித்தல்.
- ஸதகாக்கள் கொடுத்தல்.
- (இறுதிப் பத்தில்) இஃதிகாஃப் இருத்தல்.

❁ ரமழான் மாதம் வருவதையிட்டு வாழ்த்துக் கூறுவதில் தவறு கிடையாது. ஏனெனில், நபி ﷺ அவர்கள் தனது தோழர்களுக்கு ரமழான் மாதத்தின் வருகையையிட்டு நன்மாராயம் கூறியுள்ளதோடு, அம்மாதத்தில் வணக்க வழிபாடுகளை மிகக் கரிசனையுடன் செய்யுமாறும் ஆர்வமூட்டியுள்ளர்கள்.

நோன்பின் சில சட்டங்கள்

6. நோன்பு பல வகைப்படுகிறது.

- சிலவகை நோன்புகள் (அவற்றின் குறிப்பிட்ட எண்ணிக்கை வரை) இடைவிடாது ஒன்றன் பின் ஒன்றாகத் தொடர்ச்சியாக நோற்பது கடமையாகும்.

  உ + ம் :

  ரமழான் மாதத்தின் நோன்பு, தவறுதலாக நடந்த கொலைக்குக் குற்றப் பரிகாரத்திற்காக வேண்டி நோற்கும் நோன்பு, ஒருவர் தனது மனைவியை தனது தாய்க்கு ஒப்பானவள் என்று கூறியதற்காக குற்றப் பரிகாரத்திற்காக வேண்டி நோற்கும் நோன்பு, ரமழானுடைய பகல் காலத்தில் மனைவியுடன் உடலுறவில் ஈடுபட்டதற்காக குற்றப் பரிகாரத்திற்காக

வேண்டி நோற்கும் நோன்பு, இன்னும் இவை போன்ற வேறு சில நோன்புகளுமாகும்.

- மற்றும் சில வகை நோன்புகள் (அவற்றின் குறிப்பிட்ட எண்ணிக்கை வரை) இடைவிடாது ஒன்றன் பின் ஒன்றாகத் தொடர்ச்சியாக நோற்க வேண்டுமென்று கடமைகிடையாது.

உ + ம் :

ரமழான் மாதத்தில் விடுபட்ட நோன்பை நிறைவேற்றுதல் (களாச் செய்தல்), தமத்துஃ அல்லது கிரான் முறையில் ஹஜ் செய்தவர் ஹத்ய் என்னும் குர்பான் கொடுப்பதற்கு முடியாவிட்டால் அதற்குப் பதிலாகப் பத்து நாட்கள் நோற்கும் நோன்புகள், இன்னும் இவை போன்ற வேறு சில நோன்புகளுமாகும்.

7. ஸு ன்னத்தான நோன்பு ஃபர்ளான நோன்பில் ஏற்படும் குறைகளை நிவர்த்தி செய்கின்றது.

8. பின்வரும் நாட்களில் நோன்பு நோற்பது ஹதீஸ்களில் தடை செய்யப்பட்டுள்ளது :

- வெள்ளிக்கிழமை மாத்திரம் நோன்பு நோற்றல்.
- சனிக்கிழமை மாத்திரம் ஃபர்ளான நோன்பு அல்லாத நோன்பு நோற்றல்.
- (தொடர்ச்சியாக) வாழ்நாள் பூராவும் நோன்பு நோற்றல்.

- தொடர்ச்சியாக ஸஹர் செய்யாது ஒரு நோன்பை மற்ற நோன்புடன் சேர்த்து நோற்றல்.
- இரு பெருநாள் நாட்களில் நோன்பு நோற்றல்.
- ஹஜ்ஜுப் பெருநாள் நாளை அடுத்துள்ள அய்யாமுத் தஷ்ரீக் என்னும் மூன்று நாட்களில் நோன்பு நோற்றல்.

ரமழான் மாதத்தை முடிவு செய்தல்

9. ரமழான் மாதத்தின் தலைப் பிறையைக் காணுவது கொண்டு அல்லது ஷஃபான் மாதத்தை முப்பது நாட்களாகப் பூர்த்தி செய்வது கொண்டு ரமழான் மாதம் வந்து விட்டதாக முடிவு செய்யப்படும். இவ்விரு முறைகளும் இன்றி ரமழான் மாதத்தை முடிவு செய்வதற்கு நட்சத்திரக் கணக்குகளை உபயோகிப்பது பித்அத்தாகும்.

நோன்பு கடமையானவர்கள்

10. பருவ வயதையடைந்த, புத்தி சுவாதீனமான, ஊர்வாசியான, (நோன்பு நோற்கச்) சக்தியுடைய, மாதவிடாய் மற்றும் பிரசவத்தீட்டுப் போன்ற தடைகளை விட்டும் நீங்கிய ஒவ்வொரு முஸ்லிமின் மீதும் நோன்பு கடமையாகும்.

11. ஏழு வயதையடைந்த சிறுவன் நோன்பு நோற்பதற்குச் சக்தியுடையவனாக இருந்தால் நோன்பு நோற்குமாறு ஏவப்பட வேண்டும். பத்து வயதை அடைந்தும் அவன்

தொழாவிட்டால் அடிக்கப்பட வேண்டும் என்பது போன்றே, நோன்பு நோற்காவிட்டாலும் அடிக்கப்பட வேண்டும் என்று சில அறிஞர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

12. ரமழான் மாதத்தின் பகல் காலத்தில் ஒரு கா∴பிர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டால், அல்லது ஒரு சிறுவன் பருவ வயதை அடைந்தால், அல்லது ஒரு பைத்தியக்காரர் தனது பைத்தியத்திலிருந்து தெளிவடைந்தால், அன்று சூரியன் மறையும் வரை இவர்கள் எதனையும் உண்ணாமல், குடிக்காமல் இருப்பதுடன் நோன்பை முறிக்கும் ஏனைய விடயங்களையும் விட்டும் தவிர்ந்து கொள்வது கடமையாகும். ஆனால், ரமழான் மாதத்தின் இதற்கு முன்னுள்ள நோன்புகளை இவர்கள் களாச் செய்ய வேண்டியதில்லை.

13. பைத்தியக்காரரைப் பொருத்த வரை அவருக்கு எந்த நன்மையும், தீமையும் எழுதப்படமாட்டாது. ஆனால், ஒருவருக்கு பைத்தியம் விட்டுவிட்டு வரக்கூடியதாக இருந்தால், அவர் ரமழான் மாதத்தில் தெளிவாக இருக்கும் நாட்களில் மாத்திரம் நோன்பு நோற்பதே கடமையாகும். பைத்தியமாக இருக்கும் காலத்தில் நோன்பு நோற்க வேண்டியதில்லை.

இவ்வாறு விட்டுவிட்டு பைத்தியம் வருபவருக்கு எந்தச் சட்டமோ அதே சட்டம்தான் ஜின் பிடித்தவர், வலிப்பு நோய் போன்றவற்றால் அடிக்கடி மயக்கமுற்று விழுபவர் ஆகியவர்களின் சட்டமும் ஆகும்.

14. எவர் ரமழான் மாதத்தில் மரணிக்கின்றாரோ அவர் மீது எஞ்சியிருக்கும் நோன்புகளுக்காக எந்தக் குற்றமும்

கிடையாது. அத்தோடு அந்த நோன்புகளை மரணித்தவரின் உறவினர்கள் அவருக்குப் பதிலாக நிறைவேற்றவோ அல்லது அவைகளுக்குப் பதிலாக குற்றப் பரிகாரம் கொடுக்கவோ அவசியமில்லை.

15. ஒருவருக்கு ரமழானுடைய மாதத்தில் நோன்பு நோற்பது கடமை என்று தெரியாவிட்டால், அல்லது ரமழான் மாதத்தின் பகல் காலத்தில் உண்ணுவது, அல்லது மனைவியுடன் உடலுறவு கொள்வது ஹராம் என்று தெரியாவிட்டால், அவர் மார்க்கத்தைக் கற்றுக் கொள்வதற்கு எந்த வாய்ப்பும் இல்லாதவராக இருப்பின் அவர் குற்றமற்றவர், அவருக்கு மன்னிப்பு உண்டு என்பது அதிகமான அறிஞர்களின் கருத்தாகும். ஆனால், அவர் முஸ்லிம்களின் சூழலில் வாழ்பவராக, மார்க்க விடயங்களைப் பிறரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளவோ, கற்றுக் கொள்ளவோ வாய்ப்பு உள்ளவராக இருப்பின் அவர் குற்றவளியாவார், அவருக்கு அறியாமையைக் காரணம் காட்டி சலுகை வழங்கப்படமாட்டாது என்பதும் அந்த அறிஞர்களின் கருத்தாகும்.

பயணியின் நோன்பு

16. பயணத்தில் நோன்பை விடுவதற்கு நான்கு நிபந்தனைகள் இருக்கின்றன.

1. பயணம் தொலைதூர அளவிலோ, அல்லது மக்களின் வழக்கில் பயணம் என்று அறிமுகமான அளவு தூரமுடையதாகவோ இருத்தல்.
2. ஊர் எல்லையைத் தாண்டியிருத்தல்.

3. பாவமான பயணமாக இல்லாதிருத்தல் (இது அதிகமான அறிஞர்களின் கருத்தாகும்).
4. நோன்பை விடுவதற்கான உபாயமாக பயணத்தை எடுத்துக் கொள்ளாதிருத்தல்.

17. பயணியாக இருப்பவர் நோன்பு நோற்க சக்தியுள்ளவராயினும், இல்லாவிட்டாலும், அல்லது நோன்பு நோற்பது சிரமமாக இருந்தாலும் இல்லாவிட்டாலும் அவருக்கு நோன்பை விடும் சலுகை இருக்கிறது என்பது அனைத்து அறிஞர்களினதும் ஏகோபித்த முடிவாகும்.

18. ரமழான் மாதத்தில் பயணம் செய்வதற்கு உறுதியாக முடிவு செய்தவர் பயணத்தை ஆரம்பிக்கும் வரை நோன்பை விடுவதை நிய்யத் வைக்கக் கூடாது. அத்தோடு பயணியாக இருப்பவர் தனது ஊரின் மக்கள் வசிக்கும் பகுதியை விட்டும் வெளியேறி, ஊரின் எல்லையை கடந்த பின்பே நோன்பு நோற்காமல் இருக்கலாம் அல்லது நோன்பை விடலாம்.

19. விமானத்தில் பயணம் செய்ய இருப்பவர் தரையில் சூரியன் மறைந்ததும் நோன்பு திறக்கின்றார். பின்பு விமானம் கிளம்பி, ஆகாயத்தில் பறக்கும் போது சூரியனைக் காணுகின்றார். அச்சந்தர்ப்பத்தில் அவர் திரும்பவும் சூரியன் மறையும் வரை நோன்பை முறிக்கும் விடயங்களைத் தவிர்ந்து கொள்ள வேண்டியதில்லை. ஏனெனில், அவர் அன்றைய நாள் நோன்பைப் பூர்த்தியாக்கிவிட்டார்.

20. ஒருவர் நான்கு நாட்களுக்கு மேல் தங்கும் எண்ணத்துடன் ஒரு ஊருக்கு வந்தால், அங்கு இருக்கும்

காலமெல்லாம் அவர் மீது நோன்பு கடமையாகும் என்பது அதிகமான அறிஞர்களின் கூற்றாகும்.

21. ஒருவர் ஊரில் இருக்கும் போது நோன்பை ஆரம்பித்து பின்பு பகல் வேளையில் பயணம் மேற்கொண்டால் அவருக்கு நோன்பை விடுவதற்கு அனுமதியுண்டு.

22. தபால் வினியோகஸ்தர், வாடகை வண்டி ஓட்டுனர்கள், விமானிகள், உத்தியோகத்தர்கள், மாலுமிகள் போன்ற வழமையாக பயணத்தில் இருப்பவர்களுக்கு நோன்பை விடுவதற்கு அனுமதியுண்டு. அவர்களின் பயணம் நாளாந்தமாக இருந்தாலும் சரியே. அவர்களுக்குத் தங்குவதற்கு நிரந்தர ஒரு இடம் இருக்க வேண்டும். ஆனால், அவர்கள் விடுபட்ட நோன்புகளைக் கட்டாயம் பின்னர் நிறைவேற்ற வேண்டும் (களாச் செய்ய வேண்டும்).

23. ஒருவர் பயணத்தில் நோன்பு நோற்காத நிலையில் ரமழானின் பகல் வேளையில் தனது ஊரை அடைந்தால் அம் மாதத்தின் கண்ணியத்தைப் பேணும் முகமாக நோன்பை முறிக்கும் காரியங்களைச் செய்யாதிருப்பது பேணுதலுக்குரிய செயலாகும். ஆனால், அவர் நோன்பை முறிக்கும் காரியங்களைச் செய்தாலும், செய்யாவிட்டாலும் பயணத்தில் விட்ட நோன்புகளை கட்டாயம் வேறு நாட்களில் நிறைவேற்ற வேண்டும் (களாச் செய்ய வேண்டும்).

24. ஒருவர் ஒரு ஊரில் நோன்பை ஆரம்பித்து பின்னர் வேறு ஒரு ஊருக்குப் பயணம் செய்கின்றார், அந்த

ஊர்வாசிகள் இவர் நோன்பை ஆரம்பித்த ஊரினருக்கு முன்போ அல்லது பின்போ நோன்பை நோற்றிருந்தால், இவர் எந்த ஊருக்கு பயணித்து வந்தாரோ அந்த ஊர்வாசிகளின் நோன்பை அடிப்படையாகக் கொண்டே தனது நோன்பை ஆக்கிக் கொள்ள வேண்டும்.

நோயாளியின் நோன்பு

25. ஒரு மனிதன் ஆரோக்கியமற்றவன் என்றளவுக்கு ஒரு நோயினால் பீடிக்கப்பட்டிருந்தால், நோன்பை நோற்காமல் இருப்பதற்கு அவனுக்கு அனுமதியுண்டு. ஆனால், இருமல், தலைவலி போன்ற சாதாரணமான நோய்களுக்காக நோன்பை நோற்காமல் இருப்பதற்கு அனுமதி கிடையாது. நோன்பு நோற்றால் தனக்கு நோய் ஏற்படும் என்றோ அல்லது இருக்கும் நோய் அதிகரிக்கும் என்றோ அல்லது இருக்கும் நோய் சுகமடைய தாமதிக்கும் என்றோ வைத்திய ரீதியாகவோ, அல்லது தனது வழமை மற்றும் அனுபவத்தின் அடிப்படையிலோ அல்லது தனது பெரும்பாலான எண்ணத்தின் அடிப்படையிலோ உறுதியாகிவிட்டால் அவருக்கு நோன்பு நோற்காமல் இருப்பதற்கு அனுமதியுண்டு. அது மாத்திரமின்றி அவர் நோன்பு நோற்பது மக்ரூஹ் என்னும் வெறுக்கத்தக்க செயலாகும்.

26. நோன்பு நோற்பதினால் ஒருவருக்கு மயக்கம் ஏற்படுமாயின் அவர் நோன்பை விட்டுவிடவேண்டும். பின்னர் அதனை நிறைவேற்ற வேண்டும் (களாச் செய்ய வேண்டும்). ஒருவர் நோன்பு நோற்றிருக்கும் நிலையில் அவருக்குப் பகல்வேளையில் மயக்கம் ஏற்பட்டு, பின்னர்

சூரியன் மறையும் முன் அல்லது சூரியன் மறைந்த பின் அவருக்கு மயக்கம் தெளிந்து விட்டால் அவரின் நோன்பு செல்லுபடியானதாகக் கருதப்படும். ஏனெனில் இவர் காலைப் பொழுதில் நோன்பாளியாகவே இருந்துள்ளார். ஒருவர் ஃபஜ்ர் நேரத்திலிருந்து மஃரிப் நேரம் வரை மயக்க நிலையில் இருந்தால் அவரின் நோன்பு செல்லுபடியாகாது என்பது அதிகமான அறிஞர்களின் கருத்தாகும். இவ்வாறு மயக்கமுற்றவர் எவ்வளவு காலம் மயக்க நிலையில் இருந்தாலும் நோற்க முடியாமல் போன நோன்புகளை அவர் கட்டாயம் களாச் செய்ய வேண்டும் என்பதும் அனேக அறிஞர்களின் கருத்தாகும்.

27. ஒருவர் நோன்பு நோற்றிருக்கும் நிலையில் அளவுகடந்த பசி அல்லது கடுமையான தாகத்தினால் உயிர் ஆபத்து ஏற்படும், அல்லது ஐம்புலன்களில் ஒன்று பாதிக்கப்படும் என்ற எண்ணம் மிகைத்தால் அவர் நோன்பை விட்டுவிட வேண்டும். ஆனால், இவ்வாறான ஆபத்து ஏற்படலாம் என்ற யூகத்தில் நோன்பை விட அனுமதியில்லை. விட்ட நோன்புகளை பின்னர் கட்டாயம் நிறைவேற்ற வேண்டும். கடினமான தொழில்களில் ஈடுபடக் கூடியவர்களுக்கு நோன்பை விடுவதற்கு சலுகை கிடையாது. ஆனால், தொழிலை விட்டுவிடுவது அவர்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்துமாயின் மேலும் பகல் காலத்தில் வேலை செய்வதினால் உயிராபத்து ஏற்படும் என்று அவர்கள் அஞ்சினால் நோன்பை விடுவதற்கு அனுமதியுள்ளது. ஆனால், அந்த நோன்புகளைப் பின்னர் கட்டாயம் களாச் செய்ய வேண்டும். ரமழான் காலத்தில் பாடசாலைகளில் பரீட்சை எழுதும் மாணவர்கள் அதனைக்

காரணம் காட்டி நோன்பை விடுவதற்கு அவர்களுக்கு எந்த அனுமதியும் கிடையாது.

28. நோன்பு பிடிக்க முடியாத நோயாளி தனது நோய் குணமடையும் என்ற எதிர்ப்பார்ப்புடன் இருப்பாராயின் அவர் குணமடையும் வரை எதிர்ப்பார்த்திருக்க வேண்டும். குணமடைந்தபின் விட்ட நோன்புகளைக் களாச் செய்ய வேண்டும். நோன்பைக் களாச் செய்யாது மிஸ்கீன்களுக்கு உணவளித்தால் அது செல்லுபடியாகாது. குணமடைவது சாத்தியப்படாத ஒரு நோயினால் பாதிக்கப்பட்டிருக்கும் ஒரு நோயாளி, மற்றும் தள்ளாடும் வயதை அடைந்த முதியவர் ஆகியோர் ஒவ்வொரு நாள் நோன்பிற்கும் பதிலாக ஒரு வரியவருக்கு அந்த ஊரில் பிரதான உணவாகக் கொள்ளும் உணவிலிருந்து இரண்டு அள்ளுகள் கொடுக்க வேண்டும்.

29. நோயாளி குணமடைந்த பின் தான் விட்ட நோன்புகளைக் களாச் செய்யும் வாய்ப்பு இருந்தும் களாச் செய்யாத நிலையில் மரணமடைந்தால் எத்தனை நாட்கள் நோன்பு நோற்கவில்லையோ அந்த ஒவ்வொரு நாளுக்கும் பதிலாக அவரின் சொத்திலிருந்து ஒரு வரியவருக்கு உணவளிக்க வேண்டும். ஆனால் அவரின் உறவினர்களில் ஒருவர் அவருக்குப் பதிலாக அவரின் நோன்புகளை நோற்றால் அது செல்லுபடியாகும்.

முதியவர், சக்தியற்றவர், தள்ளாத வயதை அடைந்தவர் ஆகியோரின் நோன்பு

30. முதியவர் மற்றும் தனது உடல் பலத்தை இழந்திருக்கும் தள்ளாத வயதை அடைந்தவர் ஆகியோர்

மீது நோன்பு கடமையில்லை. நோன்பு நோற்பதினால் அவர்களுக்கு சிரமம் ஏற்படும் போதெல்லாம் நோன்பு நோற்காமல் இருப்பதற்கு அவர்களுக்கு அனுமதியுண்டு.

வயது முதிர்வினால் சிந்திக்கும் ஆற்றலை இழந்து எதையும் பிரித்தறிய முடியாத வயோதிபர் மீது நோன்பு கடமை இல்லை. அத்தோடு அவரின் உறவினர்கள் அவருக்காக எந்தக் குற்றப் பரிகாரத்தையும் செய்ய வேண்டியதுமில்லை. ஏனெனில், இவர் மீது எந்த மார்க்கக் கடமைகளும் விதியாக்கப்படமாட்டாது.

31. எதிரிகளுடன் யுத்தம் நடைபெறுகின்றது அல்லது எதிரிகள் ஊரைச் சுற்றி வளைத்துள்ளார்கள், இந்நிலையில் நோன்பு நோற்பதால் ஒருவர் யுத்தம் செய்ய முடியாமல் பலவீனமானவராக ஆகிவிடுவார் என்றிருந்தால் அவர் பயணியாக இருக்கா விட்டாலும் நோன்பை விடுவதற்கு அவருக்கு அனுமதியுண்டு. அவ்வாறே, யுத்தம் நடைபெற முன் நோன்பை விடுவதற்கு தேவை ஏற்படுமாயின் அப்போதும் நோன்பை விடுவதற்கு அவருக்கு அனுமதியுண்டு.

32. ஒருவர் நோன்பு நோற்காமல் இருப்பதற்குரிய காரணம் நோய் போன்ற பகிரங்கமான காரணமாக இருந்தால் அவர் பகிரங்கமாக உண்ணுவதிலோ, பருகுவதிலோ தவறேதும் இல்லை.

நோன்பு நோற்காமல் இருப்பதற்குரிய காரணம் மாதவிடாய் போன்ற மறைவானதாக இருக்குமாயின் அவர் பிறரின் தப்பபிப்ராயத்தைத் தவிர்க்குமுகமாக மறைவாக உண்ணுவதும், குடிப்பதுமே ஏற்றமானதாகும்.

நோன்பின் நிய்யத்

33. பர்ளான நோன்பு, களா மற்றும் குற்றப்பரிகாரம் போன்ற வாஜிபான நோன்பு ஆகியவற்றுக்கு நிய்யத் (நோன்பு நோற்பதை எண்ணுவது) நிபந்தனையாகும்.

இரவில் எந்தப் பகுதியிலும் நிய்யத் வைக்கலாம். எந்தளவுக்கென்றால், ஃபஜ்ருடைய நேரத்திற்கு ஒரு நொடிப் பொழுதிற்கு முன் நிய்யத் வைத்தாலும் அது அனுமதிக்கப்பட்டதாகும்.

நிய்யத் என்பது ஒரு செயலைச் செய்வதற்கு மனதில் உறுதி கொள்வதாகும். அந்த நிய்யத்தை வாயினால் மொழிவது பித்அத் என்னும் மார்க்கம் அனுமதிக்காத மார்க்கத்தில் புதிதாக உருவாக்கப்பட்ட செயலாகும்.

ரமழான் மாதத்தில் ஒவ்வொரு நாள் இரவிலும் நிய்யத் வைக்க வேண்டிய அவசியமில்லை. மாறாக, ரமழான் மாதத்தின் முதல் இரவிலே நோன்பு நோற்பதாக நிய்யத் வைப்பது போதுமானதாகும்.

34. காரணமற்ற ஸுன்னத்தான நோன்பிற்கு இரவில் நிய்யத் வைக்க வேண்டுமென்ற நிபந்தனை இல்லை.

குறிப்பான ஸுன்னத்தான நோன்பைப் பொறுத்தவரை இரவில் நிய்யத் வைப்பது பேணுதலாகும்.

35. களா, நேர்ச்சை, குற்றப்பரிகாரம் போன்ற வாஜிபான நோன்பை ஆரம்பித்து அதனைப் பூர்த்தியாக நோற்பது கடமையாகும். மேலும் மார்க்கம் அனுமதித்த தக்க காரணமின்றி அதனை இடையில் விட்டுவிடுவதற்கு அனுமதியில்லை.

ஸு ன்னத்தான நோன்பை நோற்பவர் தான் விரும்பிய வாறு நடந்து கொள்வார், விரும்பினால் நோற்ற நோன்பைப் பூர்த்தி செய்ய முடியும். விரும்பினால் தக்க காரணமின்றியே நோற்ற நோன்பை விட்டுவிடவும் முடியும்.

36. ஒருவருக்கு ரமழான் மாதம் ஆரம்பித்தது ஃபஜ்ர் உதயமானதன் பின்னரே தெரியவந்தால் அவர் அந்நாளில் எஞ்சியிருக்கும் பகுதியில் நோன்பை முறிக்கும் காரியங்களை விட்டும் தன்னைத் தடுத்து, நோன்பாளியைப் போன்று இருக்க வேண்டும். அத்தோடு அந்த நாள் நோன்பைக் களாச் செய்யவும் வேண்டும் என்பது பெரும்பாலான அறிஞர்களின் கருத்தாகும்.

37. சிறையில் அல்லது வேறு ஏதேனும் ஒரு இடத்தில் தடுத்துவைக்கப்பட்டுள்ள ஒருவர் ரமழான் மாதம் ஆரம்பமானதை பிறையைப் பார்த்து அல்லது நம்பிக்கையான ஒருவரின் வாயிலாக அறிந்து கொண்டால் அவர் மீது நோன்பு கடமையாகும். அவ்வாறு அறிய முடியாவிட்டால், தன்னால் முடிந்தளவு முயற்சித்து தனது பெரும்பாலான எண்ணத்தின் அடிப்படையில் நோன்பு நோற்க வேண்டும்.

நோன்பு திறத்தலும், நோன்பை முறிக்கும் காரியங்களைத் தவிர்ந்து கொள்ளலும்

38. சூரியனின் முழுவதுமாக மறைந்த பின் நோன்பாளி நோன்பைத் திறக்க வேண்டும். அடிவானத்தில் படர்ந்து இருக்கும் கடுமையான சிவப்பு நிறம் மறைய வேண்டுமென்ற கட்டாயம் இல்லை.

39. ஃபஜ்ர் உதயமாகிவிட்டால் நோன்பாளி அதான் சத்தத்தைக் கேட்டாலும் கேட்காவிட்டாலும் உடனடியாக நோன்பை முறிக்கும் காரியங்களைத் தவிர்ந்து கொள்ளவேண்டும்.

ஃபஜ்ருக்கு பத்து நிமிடம் அல்லது அது போன்ற கால எல்லைக்கு முன் நோன்பை முறிக்கும் காரியங்களை பேணுதலுக்காக தவிர்ந்து கொள்ளும் செயல் பித்அத்தான செயல்களில் ஒன்றாகும்.

40. எந்தப் பகுதியில் இரவும் பகலும் இருபத்து நான்கு மணிநேரம் உடையதாக இருக்குமோ அங்கு வாழும் முஸ்லிம்கள் பகல் காலம் எவ்வளவு நீண்டதாக இருந்தாலும் நோன்பு நோற்பது கடமையாகும்.

நோன்பை முறிக்கும் காரியங்கள்

41. மாதவிடாய், பிரசவத்தீட்டு தவிர்ந்த நோன்பை முறிக்கும் காரியங்களின் மூலம் நோன்பாளியின் நோன்பு முறிவதற்கு மூன்று நிபந்தனைகள் உள்ளன.

1. நோன்பாளி இது நோன்பை முறிக்கும் காரியம் என அறிந்தவராக இருக்க வேண்டும்.
2. நோன்பை முறிக்கும் காரியத்தை மறதியாக அன்றி ஞாபகத்துடன் செய்திருக்க வேண்டும்.
3. நோன்பை முறிக்கும் காரியத்தை வற்புருத்தப்பட்டோ,நிர்பந்தமாகவோ அன்றி சுயமாக தன் விருப்பத்துடன் செய்திருக்க வேண்டும்.

நோன்பை முறிக்கும் காரியங்களில் சில :

1. உடலுறவு கொள்ளுதல்.
2. வாந்தியெடுத்தல்.
3. மாதவிடாய் ஏற்படுதல்.
4. இரத்தம் குத்தியெடுத்தல்.
5. உண்ணுதல்.
6. பருகுதல்.

42. உண்ணுதல்,பருகுதல் என்பவற்றில் அடங்கும் இன்னும் சில விடயங்கள் நோன்பை முறிக்கும். அவையாவன :

உ + ம் :

1. வாய் வழியாக மருந்து மற்றும் மாத்திரைகள் போன்றவற்றைப் பருகுதல்.
2. ஊசி மூலம் உடல் பலத்தை அதிகரிக்க (ஸேலைன்)மருந்துகளை ஏற்றுதல்.
3. இரத்தம் ஏற்றுதல் மற்றும் இரத்தம் மாற்றுதல்.

- உணவு,பானம் ஆகியவற்றுக்குப் பதிலாக அன்றி வைத்தியத்திற்காக ஏற்றப்படும் மருந்தூசிகளால் நோன்பிற்கு எந்தப் பாதிப்பும் ஏற்பட மாட்டாது.
- சிறுநீரகச் சுத்திகரிப்பின் மூலம் நோன்பு முறியாது.
- பின்துவாரத்தினூடாக ஏற்றப்படும் மருந்து,கண் மற்றும் காதில் சொட்டு மருந்து ஊற்றுதல்,பல் கழற்றுதல்,காயம் மற்றும் புண்களுக்கு மருந்து போடுதல் போன்றவைகளின் மூலம் நோன்பு முறியாது.
- மூச்சடைப்பிற்காக எடுக்கப்படும் ஒக்ஸிஜன் வாயு நோன்பை முறிக்காது.
- பரிசோதனைக்காக இரத்தம் எடுப்பதினால் நோன்பு முறியாது.
- வாய் கழுவுவதற்காக எடுக்கும் மருந்தை விழுங்காவிட்டால் நோன்பு முறியாது.
- பல்லை நிரப்பி பின்னர் அதன் சுவையை தனது தொண்டையில் உணர்ந்தாலும் அது அவரின் நோன்பிற்கு எந்தப் பாதிப்பையும் ஏற்படுத்தாது.

43. யார் ரமழானுடைய பகல் காலத்தில் தக்க காரணமின்றி வேண்டுமென்றே சாப்பிடுகிறாரோ அல்லது குடிக்கிறாரோ அவர் மிகப் பெரும் பாவமொன்றைச் செய்துவிட்டார். எனவே அதற்காக அவர் தவ்பாச் செய்வதும் அந்த நோன்பைக் களாச் செய்வதும் கடமையாகும்.

44. ஒருவர் மறதியாக சாப்பிட்டால் அல்லது குடித்தால் அவர் நோன்பின் மீதமாக இருக்கும் பகுதியை பூர்த்தி

செய்ய வேண்டும். அல்லாஹ்வே அவருக்கு உண்ணவும் குடிக்கவும் கொடுத்தான்.

ஒரு நோன்பாளி மறதியாக உண்ணுவதை ஒருவர் பார்த்தால் நோன்பாளி நோன்பு வைத்திருக்கிறார் என்பதை ஞாபகப்படுத்துவது கடமையாகும்.

45. ஒரு கண்ணியமான உயிரைப் பாதுகாப்பதற்காக ஒருவர் நோன்பை விடவேண்டிய தேவை ஏற்பட்டால், அவர் நோன்பை விட்டுவிட்டு பின்னர் களாச் செய்ய வேண்டும்.

46. நோன்பு கடமையான ஒருவர் ரமழானுடைய பகல் காலத்தில் வேண்டுமென்றே சுயவிருப்பத்துடன் உடலுறவில் ஈடுபட்டால் அவர் தனது நோன்பைப் வீணாக்கிவிட்டார். எனவே, அவர் அதற்காகத் தவ்பாச் செய்து, நோன்பின் எஞ்சிய பகுதியைப் பூர்த்தி செய்வதோடு வேறு ஒரு நாளில் அதனைக் களாச்செய்வதும் கடமையாகும். அத்தோடு கடினமான குற்றப்பரிகாரமும் அவர் மீது கடமையாகும். விபச்சாரம், தன்னினச் சேர்க்கை, மிருகங்களுடன் தவறான உறவு கொள்ளுதல் போன்ற செயல்களுக்கும் இதுவே சட்டமாகும்.

47. ஒருவர் தனது மனைவியுடன் உடலுறவு கொள்ளும் நோக்கத்தோடு ஏதேனும் ஒன்றை சாப்பிட்டு நோன்பை விட்டுவிட்டால் இவர் மிகப் பெரும் குற்றம் செய்தவராவார். ஏனெனில், இவர் ரமழான் மாதத்தின் புனிதத்தை இரண்டு விதத்தில் மாசுபடுத்திவிட்டார். ஒன்று சாப்பிடுவதின் மூலம். இரண்டாவது உடலுறவு கொள்வதின்

ழூலம். ஆகையால், கடினமான குற்றப்பரிகாரம் இவர் மீது மிகவும் கடமையாகிறது.

48. நோன்பாளி தன்னைக் கட்டுப்படுத்தும் ஆற்றலுடையவராயின் தனது மனைவி அல்லது அடிமைப்பெண் ஆகியவர்களை முத்தமிடுவது, அவர்களுடன் சிற்றின்பங்களில் ஈடுபடுவது, கட்டியணைப்பது, தொடுவது, திரும்பத்திரும்பப் பார்ப்பது போன்ற செயல்கள் அவருக்கு அனுமதிக்கப்பட்டவைகளாகும். ஆனால், அவர் தன்னைக் கட்டுப்படுத்தும் ஆற்றல் அற்றவராக, மிக விரைவில் தனது ஆசைக்குக் கட்டுப்படுபவராக இருப்பின் அவருக்கு இந்த செயல்கள் அனுமதிக்கப்படமாட்டாது.

49. ஒருவர் உடலுறவில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் போது பஜ்ர் உதயமாகிவிட்டால் உடனடியாக அவர் உடலுறவிலிருந்து நீங்கிக் கொள்வது கடமையாகும். அவ்வாறு அவர் உடலுறவிலிருந்து நீங்கிக் கொண்டதன் பின் அவருக்கு இந்திரியம் வெளிப்பட்டாலும் அவரின் நோன்பு செல்லுபடியானதாகவே கருதப்படும். ஆனால், பஜ்ர் உதயமானதன் பின்னும் அவர் தொடர்ந்தும் உடலுறவில் ஈடுபட்டுக் கொண்டிருந்தால் அவர் நோன்பை விட்டவராகவே கருதப்படுகிறார். எனவே, அவர் தவ்பாச் செய்வது கடமையாகும். மேலும், அந்த நோன்பைக் களாச் செய்வதோடு கடினமான குற்றப்பரிகாரத்தை நிறைவேற்றுவதும் கடமையாகும்.

50. ஒருவர் குளிப்புக் கடமையான நிலையில் ஸுப்ஹுடைய நேரத்தை அடைந்தால் அது அவரின் நோன்புக்கு எந்தப் பாதிப்பையும் ஏற்படுத்தாது. கடமையான குளிப்பு, மாதவிடாய் மற்றும்

பிரசவத்தீட்டு ஆகியவற்றிற்காகக் குளிப்பது ஆகியவைகளை பஜ்ர் உதயாமானதற்குப் பின்னரும் பிற்படுத்துவதில் குற்றம் கிடையாது. ஆனால், தொழுவதற்காக அவசரமாக குளித்துக் கொள்ளும் கடமை அவருக்குண்டு.

51. நோன்பாளிக்கு தூக்கத்தில் இந்திரியம் வெளிப்பட்டால் அவரின் நோன்பு முறிந்துவிடாது என்பது எல்லா அறிஞர்களின் ஏகோபித்த கருத்தாகும். எனவே, அவர் அந்த நாளின் மீதமாக இருக்கும் பகுதியை நோன்பாகவே களிக்க வேண்டும்.

52. (மர்ம உறுப்பை) தொடுதல், திரும்பத்திரும்பப் பார்த்தல் போன்ற தன்னால் தவிர்ந்து கொள்ள முடிந்த ஒரு முறையின் மூலம் ரமழானுடைய பகல் காலத்தில் ஒருவர் சுயஇன்பத்தின் மூலம் இந்திரியத்தை வெளிப்படுத்திக் கொண்டால் அவர் அல்லாஹ்விடம் தவ்பாச் செய்வது கடமையாகும். மேலும், அந்த நாளின் எஞ்சிய பகுதியில் நோன்பை முறிக்கும் காரியங்களைத் தவிர்ந்து கொள்வதோடு அந்த நோன்பை களாச்செய்வதும் கடமையாகும்.

53. ஒருவரை மிகைத்து வாந்தி வந்தால் அவர் நோன்பைக் களாச்செய்ய வேண்டியதில்லை.

- வேண்டுமென்றே வாந்தியெடுத்தால் அவர் அந்த நோன்பைக் களாச்செய்வது கடமையாகும்.

- ஒருவரை மிகைத்து வந்த வாந்தி, அதாகவே மீண்டும் உள்ளே சென்றால் அவரின் நோன்பு முறியாது.

- சுயிங்கத்தைப் பொறுத்த வரை அதன் ஏதேனும் பகுதிகள் கரையக் கூடியதாக இருந்தால், அல்லது அதற்குச் சுவையோ அல்லது இனிப்பு வகையோ சேர்க்கப்பட்டு இருந்தால் அதனை மெல்லுவது ஹராமாகும். இதில் சிறிதேனும் தொண்டையை அடைந்தால் நோன்பு முறிந்து விடும்.

- காரக்கட்டி, சளிக்கட்டி என்பவைகளை வாயை அடைய முன் விழுங்கினால் நோன்பு முறியாது. அவை வாயை அடைந்த பின் அதனை விழுங்கினால் நோன்பு முறிந்துவிடும்.

- தேவையின்றி உணவை ருசி பார்ப்பது மக்ரூஹ் ஆகும் (மார்க்கத்தில் வெறுக்கப்பட்டதாகும்).

54. நோன்பாளி பகலின் எல்லாப் பகுதிகளிலும் மிஸ்வாக் செய்வது (பல் துலக்குவது) ஸு ன்னத்தாகும்.

55. நோன்பாளிக்கு ஏற்படும் காயம் அல்லது மூக்கிலிருந்து வடியும் இரத்தம் அல்லது தன்னையறியாமல் தண்ணீர் அல்லது பெற்றோல் (போன்றவைகளை உறியும் போது) தொண்டைக்குள் சென்றால் அதனால் நோன்பு முறியாது.

- கண்ணீர் தொண்டைக்குள் செல்லுதல் அல்லது தலைக்கு மற்றும் மீசை, (தாடி)க்கு எண்ணைய் தடவுதல் அல்லது மருதாணி இட்டதனால் அதன் சுவையை தொண்டையில் உணர்வதால் நோன்பிற்கு எந்தப் பாதிப்பும் ஏற்படமாட்டாது.
- மருதாணி இடுதல் அல்லது ஸு ருமா போடுதல் அல்லது எண்ணைய் தடவுவதனால் நோன்பு முறியாது.
- தோலை மென்மையாக்கும் கிரீம் வகைகளை உபயோகிப்பதினால் நோன்பு முறியாது.
- வாசனைத் திரவியங்களை நுகர்வதில் குற்றமேதும் இல்லை. ஆனால், வாசனைப் பொருட்களின் புகை தொண்டையை அடைவதை விட்டும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

56. நோன்பாளி இரத்தம் குத்தி எடுக்காமல் இருப்பதே பேணுதலாகும். இந்தச் சட்டத்தில் கடுமையான கருத்து வேறுபாடு இருக்கிறது.

57. புகைத்தல் நோன்பை முறிக்கும் காரியங்களில் ஒன்றாகும். புகைத்தல் நோன்பை விடுவதற்கு ஒரு தகுந்த காரணமல்ல.

58. நோன்பாளி தண்ணீருக்குள் மூழ்கிக் குளிப்பதில் அல்லது சூட்டைத் தனித்து கொள்ளும் பொருட்டு ஈரமான ஒரு ஆடையினால் உடம்பை போர்த்திக் கொள்வதில் தவறேதும் இல்லை.

59. இரவு இன்னும் மீதியுள்ளது என்ற எண்ணத்தில் சாப்பிட்டால் அல்லது குடித்தால் அல்லது உடலுறவில் ஈடுபட்டால் பின்னர் ஃபஜ்ர் உதயமாகிவிட்டது என அவருக்குத் தெரியவந்தால் அவர் மீது எந்தக் குற்றமும் கிடையாது.

60. சூரியன் மறையாத நிலையில் ஒருவர் சூரியன் மறைந்து விட்டதாக எண்ணி நோன்பைத் திறந்தால், அவர் அந்த நோன்பை அவசியம் களாச்செய்ய வேண்டும் என்பது பெரும்பாலான அறிஞர்களின் கருத்தாகும்.

61. ஒருவருடைய வாயில் உணவு அல்லது பானம் இருக்கும் நிலையில் ஃபஜ்ர் உதயமாகிவிட்டால் அவர் அதனை துப்பிவிட வேண்டும். அவ்வாறு செய்தால் அவரின் நோன்பு செல்லுபடியானதாகும் என்பது சட்டக்கலை அறிஞர்களின் ஏகோபித்த கருத்தாகும்.

பெண்களுக்குரிய நோன்பின் சில சட்டங்கள்

62. பருவ வயது அடைந்ததை தெரிவிக்க வெட்கப்பட்டு நோன்பு நோற்காது இருந்த பெண்பிள்ளை அல்லாஹ்விடம் தவ்பாச் செய்வது அவசியமாகும். மேலும், அடுத்த வருட ரமழான் வரை தனக்கு தவறிவிட்ட நோன்புகளைக் களாச் செய்யா விட்டால் அந்த நோன்புகளைக் களாச் செய்வதுடன், பிற்படுத்தியதற்கு குற்றப்பரிகாரமாக ஒவ்வொரு நாளைக்கும் பதிலாக ஒரு வரியவருக்கு (மிஸ்கீனுக்கு) உணவளிக்க வேண்டும்.

தனது மாதவிடாய்க் காலத்தில் வெட்கத்தினால் நோன்பு நோற்று, (அடுத்த வருடம் வரை) களாச் செய்யாத பெண்ணின் சட்டமும் இதுவே.

63. ஒரு பெண் தனது கணவர் (ஊரில்) இருக்கும் போது ரமழான் அல்லாத (ஸு ன்னத்தான) நோன்புகளை அவரின் அனுமதியின்றி நோற்கக் கூடாது. அவர் பயணத்திலிருந்தால் (அவரின் அனுமதியின்றி நோன்பு நோற்பதில்) குற்றமில்லை.

64. ஒரு பெண் தான் மாதவிடாயிலிருந்து சுத்தமாகிவிட்டதாக அறிந்து கொள்ளும் (அடையாளமாகிய) வெள்ளை படுதலைக் கண்டால் நோன்பிற்காக இரவில் நிய்யத் வைத்து நோன்பை நோற்க வேண்டும்.

ஒரு பெண் தான் மாதவிடாயிலிருந்து சுத்தமாகியதற்கான எந்த ஒரு அடையாளத்தையும் காணாவிட்டால் பஞ்சு அல்லது அது போன்ற ஏதேனும் ஒரு பொருளைத் தனது பெண்ணுறுப்பினுல் சற்று நுழைய வைத்துப் பார்க்க வேண்டும். அப்போது அது மாதவிடாயின் அசுத்தங்கள் ஏதும் இன்றி சுத்தமாக இருந்தால் அந்தப் பெண் நோன்பு நோற்க வேண்டும்.

மாதவிடாய் அல்லது பிரசவத்தீட்டு ஏற்பட்ட ஒரு பெண் இரவில் இரத்தம் நின்று சுத்தமாகியதன் பின் நோன்பிற்கு நிய்யத் வைக்கிறாள். ஆனால், அவள் குளிப்பதற்கு முன் ஃபஜ்ர் உதயமாகிவிடுகின்றது. இச் சந்தர்ப்பத்தில் அவளின் நோன்பு செல்லுபடியானதாகும் என்பதே அனைத்து அறிஞர்களினதும் கருத்தாகும்.

65. நாளை மாதவிடாய் ஏற்படும் என்பதை தனது வழமையை வைத்து அறிந்து வைத்திருக்கும் பெண் இரத்தத்தைக் காணும் வரை (அன்றைய) நோன்பை முறிக்காது தொடர்ந்து நோற்பதோடு, அந்த நோன்பின் நிய்யத்தையும் தொடர்ச்சியாக வைத்துக் கொள்ள வேண்டும்.

66. மாதவிடாய் ஏற்பட்ட பெண் இரத்தத்தைத் தடுக்கும் மாத்திரைகளை உபயோகிக்காது, தன் மீது அல்லாஹ் எழுதியுள்ள விதியைப் பொருந்திக் கொண்டு, தனது வழமையான நிலையில் இருப்பதே மிகச் சிறந்ததாகும்.

67. ஓர் கர்ப்பிணிப் பெண் (நான்கு மாதங்கள் பூர்த்தியாகியுள்ள) உருவமைப்புப் பெறுவதற்கு ஆரம்பமாகியுள்ள சிசுவைப் பெற்றெடுத்தாள். எனவே, அப்பொழுதே அப்பெண்ணின் பிரசவத்தீட்டு ஆரம்பமாகிவிட்டது. எனவே, அப்பெண் நோன்பு நோற்கக் கூடாது. அவ்வாறில்லாது உருவமைப்புப் பெறுவதற்கு முன்னரே சிசு வெளிவந்தால் அப்பெண் "முஸ்தஹாழா" நோயினால் இரத்தப் போக்கு ஏற்பட்ட பெண்ணாகவே கருதப்படுகிறாள். எனவே, அப்பெண் (இரத்தப் போக்குடன்) சக்தியிருந்தால் நோன்பு நோற்பது கடமையாகும்.

- பிரசவத்தீட்டு நாற்பது நாட்களுக்கு முன் சுத்தமாகிவிட்டால் நோன்பு நோற்க வேண்டும். மேலும், தொழுகைக்காகக் குளித்துக் கொள்ள வேண்டும்.
- பிரசவத்தீட்டு நாற்பது நாட்களையும் தாண்டிவிடுமாயின் அவள் நோன்பிற்கு நிய்யத்து வைத்து நோன்பை நோற்க

வேண்டும். மேலும், (தொழுகைக்காக) குளித்துக்கொள்ள வேண்டும். நாற்பது நாளையும் தாண்டிய அவளின் இந்த இரத்தப்போக்கு நோயினால் வெளியாகும் இஸ்திஹாழா எனப்படும் இரத்தமாகக் கருதப்படும்.

68. இஸ்திஹாழாவின் இரத்தம் நோன்பில் எந்தப் பாதிப்பையும் ஏற்படுத்தாது.

69. கர்ப்பிணித்தாய் மற்றும் பாலுட்டும்தாய் ஆகிய இருவரும் (நோன்பின் சட்டத்தில்) நோயாளியைப் போன்றவர்கள் என்ற கருத்தே (அறிஞர்களின் கருத்துகளில்) வலுவான கருத்தாகும். இவர்கள் இருவருக்கும் தம்மீது அல்லது தமது குழந்தைகள் மீது ஏதும் தீங்கு ஏற்படும் என்ற அச்சமிருந்தால் நோன்பு நோற்காமல் இருப்பதற்கு அனுமதியுண்டு. அத்தோடு, நோற்க முடியாமல் போன நோன்புகளைக் களாச்செய்ய வேண்டும். வேறு எந்தப் பரிகாரமும் அவர்கள் மீது கடமையாகாது.

70. நோன்பு கடமையான பெண்ணுடன் அவளது கணவர் அவளின் விருப்பத்துடன் ரமழானில் பகல் காலங்களில் உடலுறவு கொண்டால் கணவன் மனைவி இருவரும் சட்டத்தில் சமமானவர்கள். ஆனால், மனைவி வற்புறுத்தப் பட்டவளாக இருந்தால் அவள் தனது கணவரை உடலுறவை விட்டும் இயன்றவரை தடுப்பது கடமையாகும். அதையும் மீறி அவன் உடலுறவு கொண்டால் அவள் மீது எந்தக் குற்றப்பரிகாரமும் கடமையில்லை.

முடிவில், இவைகள் நோன்பின் சட்டங்களில் குறிப்பிட்ட சிலதாகும். அல்லாஹ் எமக்கு அவனை ஞாபகப்படுத்தவும், அவனுக்கு நன்றி செலுத்தவும், அவனை நல்ல முறையில் வணங்கவும் உதவி செய்யுமாறு அவனிடம் வேண்டுகிறேன், மேலும், ரமழான் மாதத்தில் பாவங்கள் மன்னிக்கப்பட்டவர்களாவும், நரகிலிருந்து விடுவிக்கப்பட்டவர்களாகவும் அம்மாதத்தை எமக்கு முடித்துத் தருமாறும் அவனிடம் வேண்டுகிறேன்.

المسابقة الرمضانية للجالية التاميلية عام ١٤٣١ هـ

ரமழான் வினா விடைப் போட்டி

1431 – 2010

1. ரமழான் மாதம் வருவதையிட்டு வாழ்த்துக் கூற முடியுமா?

2. வலிப்பு நோயினால் அடிக்கடி மயக்கமுற்று விழுபவருக்குரிய நோன்பின் சட்டத்தைக் குறிப்பிடுக.

3. ஒருவர் தரையில் நோன்பைத் திறந்தபின் விமானத்தில் பயணஞ் செய்கிறார் பின்பு, விமானம் கிளம்பி ஆகாயத்தில் பறக்கும் போது சூரியனைக் கண்டால் அவர் என்ன செய்ய வேண்டும் ?

4. “தனது நோய் குணமடையும் என்ற எதிர்ப்பார்ப்புடன் இருக்கும் நோயாளி, குணமடைந்தபின் விட்ட நோன்புகளுக்காக மிஸ்கீன்களுக்கு உணவளித்தால் போதுமானதாகும்” இந்த கூற்றைப் பற்றிய உமது அபிப்ராயம் என்ன ?

5. கர்ப்ணித்தாய், பாலூட்டும்தாய் ஆகிய இருவரும் நோன்பின் சட்டத்தில் யாரைப் போன்றவர்கள் ? இவர்கள் விடுபட்ட தமது நோன்புகளுக்காக என்ன செய்ய வேண்டும் ?

6. நோன்பின் சிறப்புகளில் மூன்றைக் குறிப்பிடுக.

7. ஒரு பெண் ரமழானின் பகல்காலத்தில் அவளது கணவருடன் தனது விருப்பத்துடன் உடலுறவு கொண்டால் அவளுக்குரிய குற்றப்பரிகாரம் என்ன ?

8. ஒரு பெண் பிரசவித்த பின் 56 நாட்களைத்தாண்டியும் அவளது இரத்தப் போக்கு தொடரும் நிலையில் ரமழான் மாதத்தையடைந்தால், அவளுக்குரிய நோன்பின் சட்டம் என்ன என்பதைக் காரணத்துடன் விபரிக்க.

வினா விடைப் போட்டி 1431 – 2010

நிபந்தனைகள் :

1-எல்லா வினாக்களுக்கும் விடை எழுத வேண்டும்.

2-விடைத் தாள்கள் ஸு லை தஃவா நிலையத்தில் 25-09-1431 ஹி 04-09-2010 ம் திகதிக்கு முன் ஒப்படைக்கப்பட வேண்டும்.

3-பெயர், முகவரி, தொலைபேசி எண் அனைத்தும் எழுதப்பட வேண்டும்.

4-விடைகள் தெளிவான எழுத்தில் எழுதப்பட வேண்டும்.

5-ஒரேவிதமான விடைத்தாள்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

6-சவ்வால் மாத இறுதியில் வெற்றியாளர்களுக்கு தஃவா நிலையத்தில் பரிசுகள் வழங்கப்படும்.

பரிசுகள் :

1 முதல் 10 வரை எல்லா வெற்றியாளர்களுக்கும் பெறுமதிவாய்ந்த பரிசுகள் வழங்கப்படும்.